பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 சித்திரை 27 ஜ அவ்: 19 இதழ்: 87
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 9-5-7

## 'தேர்தலுக்குமுன் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவும்'

யாழ்ப்பாணம், திங்கள்

'தென்னிலங்கையில் உள்ள தேசியக்கட்சிகள் தமிழ்மக்களின் அங்கீகாரத்தைப்பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் வட்டமேசை மாநாடு நடத்தவேண்டும் அத்தியாவசியமாகாதபட்சத்தில் அக்கட்சிகள் பொதுத்தேர்தலுக்கு முன்னர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறுபான்மையினரது பிரச்சினை தீர்த்தாம் எடுக்கப்போகும் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தவேண்டும்.''

இவ்வாறு வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளரான திரு. வி. பொன்னம்பலம் கூறினர்.

நேற்று சுன்னுகத்தில் சுன்னுகம் பட்டண சபைத்தலைவர் திரு. பி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற மக்கள் வங்கி விழா ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னர்.

### நிறைவேருத வாக்குறுதி

திரு. வி. பி. தமது உரையில் மேலும் கூறியதாவது:



''இல்லறைய சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆற்றியுள்ள'' நற்

(6-ம் பக்கம் பார்க்க)

# "தமிழர் விடுதலைப் பேரணி"

# புதிய கட்சி உருவாகும்?

## கூட்டணி வேட்பாளர் தெரிவு ஏற்படுத்தும் புதியபிரச்சினை

யாழ்ப்பாணம், திங்கள்

மறைந்த தலைவர் தந்தை செல்வாவுக்கு நினைவாலயம் கட்டுவதற்கான முயற்சிகள் ஒருபுறம். மற்றொருபுறத்தில் தந்தையின் பெயரால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதே சமயம் வேட்பாளர் தெரிவு சம்பந்தமாக கையெழுத்து வேட்டை, சத்தியாக்கிரகம், உண்ணுவிரதம், மகஜர் கையளித்தல், ஆர்ப்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்போதுள்ள சூழ்நிலையில் வேட்பாளர் தெரிவில் அதிருப்தி கொண்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் சிலஇளைஞர்களுமாகச் சேர்ந்து மறைந்த சட்டமேதையும் முன்னுள் உள்ளூராட்சி அமைச்சருமான திரு. எம். திருச்செல்வம் உத்தேசித்திருந்த 'தமிழர் விடுதலை இயக்கம்' என்ற பெயரில் சிறுமாற்றம் செய்து 'தமிழர் விடுதலைப் பேரணி' என்ற புதிய இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இம் மாதம் 14 அல்லது 15 ம் திகதிகளில் இந்தப் புதிய பேரணி உருவாக்கப்படலா மென்றும் இளைஞர் பேரவை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

### நல்லூரில் சிவா!

நல்லூர்த் தொகுதிக்குத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரமே கூட்டணி வேட்பாளராக நியமிக்கப்படுவாரென்பது நிச்சயமாகிவிட்டது. திரு. சிவசிதம்பரம் தாமாகவே உடுப்பிட்டித் தொகுதியைச் சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு விட்டுக் கொடுத்து நல்லூர்த் தொகுதியை விரும்பினுரென்றும் கூட்டணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

நல்லூர்த் தொகுதியில் திரு. மு. ஆலாலசுந்தரத்தைநிறுத்துவது நிச்சயமில்லை என்பதால் இளைஞர்கள் உருவாக்கத்திட்டமிட்டுள்ள தமிழர் விடுதலைப் பேரணியின் சார்பில் அவரை முல்லைத்தீவுத் தொகுதியில் நிறுத்துவதற்கும் திருமலையில் திரு. தங்கத்துரையையும் மற்றும் சிலதொகுதிகளில் வேறு இளைஞர்களையும் நிறுத்துவதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

உத்தேசத் தமிழர் விடுதலைப் பேரணி'யில் தமிழ் அரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் சுயாட்சிக் கழகம், முஸ்லிம் ஐக்கிய முன்னணி' என்ற தனித்துவம் இல்லாமல் எல்லோரும் பேரணியினரே என்ற ஒருமைப்பாடே இருக்குமென்றும் இளைஞர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் பல கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து அமைக்கப்பட்ட ஜனதா கட்சியில் இப்போது கூட்டுக்கட்சிகள் தமது தனித்துவத்தைவிடுத்து ஒரே கட்சியாக இணைந்துள்ளதை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனித்தனிக் கட்சிகளைச் சேர்த்து கூட்டணி அமைக்கப்பட்டதால்தான் தொகுதிக்குச் சண்டை போடவேண்டியேற்பட்டுள்ளதென்றும் இளைஞர்கள் கூறுகின்றனர்.

### ஆர்ப்பாட்டமும் துண்டுப்பிரசுரமும்

நேற்றும் உடுப்பிட்டியில் இருந்து சுமார் இருநூறு பேர் லொறிகளிலும் வான்களிலும் தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகத்துக்கு வந்து, உடுப்பிட்டியில் சிவாவையே நிறுத்தவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன்பின் அவர்கள் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்துக்கும் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்துக்கும் சென்று ஆர்ப்பாட்டம் செய்ததுடன் மகஜரையும் கையளித்தனர்.

இதேசமயம் வேட்பாளர் நியமனம் பற்றிய ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் சத்தியாக்கிரகங்களைக் கிண்டல் செய்யும் விதத்தில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த உமைகுமாரன் என்பவர் துண்டுப்பிரசுரமொன்றைவெளியிட்டுள்ளார்.

இத் துண்டுப்பிரசுரத்தில் ஆர்ப்பாட்டங்களுக்கு இத்தனை ரூபாய், ஊர்வலத்துக்கு இவ்வளவு தொகை என்று இரத்தத்தில் (சிவப்பு மை) கையெழுத்து வைத்தல்வரை கட்டணவிபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

### கயரோக தடுப்புச்சங்கம்

வவனியா, ஞாயிறு

இலங்கை தேசிய கயரோக தடுப்புச் சங்கம் வவனியாக் கிளைச் கூட்டம் வவனியா அரசாங்க அதிபர் அலுவலகத் அரசாங்க அதிபர் தலைமையில் கூடியபோது பின்வரும் உத்தியோகத்தர்கள் நடப்பு வருடத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டனர்.

யாற்றி விபததில் சிக்கி அகால மரணமடைந்த குமரையா தேவராஜனின் இறுதிக்கிரியையின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

தேவராஜனின் இறுதியாத்திரை அவருடைய றக்கா வீதியிலுள்ள இல்லத்திலிருந்து கச்சேரி—நல்லூர் வீதியிலிருக்கும் விற்பனவுத திணைக்கள பண்டசாலைக்கு மோட்டார் பவனியில் எடுத்துச்செல்லப்பட்டது.

விற்பனவுத திணைக்களஉதவி ஆணையாளர் திரு. கந்தசாமி பண்டசாலை முகாமையாளர் திரு. சிறில் ஆகியோர் தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர். (அ)

### வேலரும் மயிலரும்



வேலர்: கண்மூடித் தலைமயிர் வளர்த்த பெட்டை பொடியன்களை நம்பித் தேர்தலில் இறங்கக்கூடாது.
மயிலர்: ஏன்?
வேலர்: புள்ளடியைப் பிழையான இடத்திலே போட்டிடுங்கள்.

— சுந்தர்.

## "முதலாளித்துவ சக்திகளே இனப்பகைக்குக் காரணம்"

யாழ்ப்பாணம், திங்கள்

''1970 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எமது கட்சி பங்கு கொள்வதில்லை எனத்தீர் மானித்து முதலாளித்துவ ஆட்சிமன்றப் பாதையால் எமது நாட்டு மக்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படமாட்டாது எனக் கூறியபோது எள்ளி நகையாடியபலர்கடந்தஏழுவருடகால ஆட்சியின் அனுபவங்களால் எமது கூற்றை ஏற்றுக்கொள்கின்றனர். கடந்த தேர்தல் விளையாட்டைப்போல் ஒரு தேர்தல் வர இருப்பதால் தொழிலாளி வர்க்கப் போராட்டதினமான மேதினத்தைத் தமது தேர்தல் ஏமாற்றுக்குப் பாவிக்கச் சகல கட்சிகளும் முனைந்துள்ளன. இவ்வேளை நமது கட்சிமட்டுமே மீண்டும் தேர்தலை நிராகரிக்கின்ற பாதையை வலியுறுத்திபுரட்சிகர மேதினத்தை கொண்டாடுகின்றது''

மேற் கண்டவாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. காந்தி அபயசேகரா கூறினர். திரு கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் 'தென் இலங்கையில் உள்ள சாதாரண சிங்கள மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் என்பதை விரும்புகிருர்கள். இந்நாட்டில் சகோதரர்கள் போல் வாழ விரும்புகிருர்கள். அதேபோல் சாதாரண தமிழ் மக்களும் விரும்புகிருர்கள். ஆனல் இன்றைய தனிச் சொத்துடைமையை மையமாகக்கொண்ட சமூக அமைப்பைக் கட்டிக் காத்து உழைக்கும் மக்களைச் சுரண்டிவாழும் சிங்கள - தமிழ் முதலாளித்துவ சக்திகள்தான் இரு இன மக்களையும் எதிரிகளாக்கி வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் பக்கத்தில் எமது கட்சி தெற்கிலும் வடக்கிலும் எவ்வித தயக்கமும் இன்றி வேலை செய்து வருகின்றது' என்று கூறினர். (அ)

### திணேஷ்சிங் உட்பட எண்மர் ராஜினமா

புதுடில்லி, மே 8

மத்திய அரசின் முன்னுள் வெளியுறவு அமைச்சர் திரு. தினேஷ்சிங் உட்பட காங்கிரஸ் தலைவர்கள் எண்மர் கட்சியில் இருந்து ராஜினமாச்செய்துள்ளனர்.

கட்சி தன் அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகிவிட்டது என்று இவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மணிவாக்கு

எல்லாருக்கும் திருப்தி கொடுப்பதற்கென நடந்து கொள்பவன் ஒருவருக்கும் திருப்தி கொடான.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

## புதிய தாக்குதல்!

யாழ்ப்பாணப் பகுதியில் முன்னெப்போதுமில்லாதவாறு இம்முறை வெங்காயப் பயிரை புதியதொரு புளு நோய் தாக்கத் தொடங்கிப் பெருந்தொகையான பயிரை அழித்திருக்கிறது.

வெங்காயத்தை மட்டுமல்ல மிளகாய்ச் செய்கையை இந்தப் புளுநோய் கடுமையாகத் தாக்கியிருப்பதாக விவசாயிகள் புகார் செய்கின்றனர்.

யாழ்ப்பாண விவசாயிகள் பெரும்பாலும் வெங்காயம், மிளகாய் போன்ற உபஉணவுச் செய்கையில் ஈடுபடுபவர்கள்.

வெங்காயத்துக்கும் மிளகாய்க்கும் நாட்டில் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் வெளிச்சந்தையில் மிளகாயின் விலையும் அதிகரித்து இறக்குமதி செய்ய முடியாத நிலையும் இருந்தது.

அந்தச்சமயத்தில் மிளகாய் வெங்காயம் போன்ற உபஉணவுப் பொருள்களை உற்பத்திசெய்து நாட்டின் அந்நிய செலாவணியை மீதப்படுத்த உதவுமாறும் உபஉணவுப் பொருள்களில் தன்னிறைவு காண்பதற்கு ஒத்துழைக்குமாறும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது.

யாழ்ப்பாண விவசாயிகள் இந்த வேண்டுகோளை உடன் ஏற்று 'காசுப் பயிரான' புகையிலைச் செய்கையைக் கூடக் கைவிட்டு மிளகாய், வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். இப்பொருள்களில் நாடு தன்னிறைவு கண்டது.

இடையிடையே இயற்கையின் தாக்கங்களால் இப்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டதுண்டு.

இது தவிர விசுவமடுப் பகுதியில் தவறான கிருமிநாசினி விநியோகிக்கப்பட்டு பலருடைய மிளகாய்ச் செடிகள் அழிந்ததும் துயரம்மிக்க சம்பவம்.

இப்போது மிளகாய், வெங்காயப்பயிர்களைப்புதிய புளு நோய் தாக்கியதும் விவசாயப் பகுதியினர் புதியதொரு கிருமிநாசினியை விவசாயிகளுக்குச் சிபார்சு செய்தனர்.

ஆனல் அந்தக் கிருமிநாசினி விவசாயிகளுக்குத் தட்டுப்பாடில்லாமல் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

இதனல்விவசாயிகள் உடனடியாகவே புளுநோயைத் தடுப்பதற்கு மருந்து தெளிக்கமுடியாமற்போய்விட்டது.

விவசாயப் பெருக்கக் குழுக்கள், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கிருமிநாசினி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டியது அவசியம்.

காலையில் திருச்சிவானெலியில் தினமும் விவசாயிகளுக்கான குறிப்புக்கள் அறிவிக்கப்படுகின்றன.

எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன பயிருக்கு எப்படியான நோய்கள் கண்டிருக்கின்றன; இவற்றுக்கு என்ன மருந்து தெளிக்கப்படவேண்டும்; எப்படி யெப்படிக் கலந்து தெளிக்கவேண்டும்; அந்த மருந்து கிடைக்கக்கூடிய இடம் முதலிய சகல விபரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இதனல் விவசாயிகளுக்குப் பெரும்பயன் கிடைக்கிறது.

மண்டைதீவில் உபஅஞ்சல் நிலையம்வந்தபின் நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்க முடிகிறது. ஆனல் நாள் முழுவதும் விளம்பரத்தையும் சினிமாப்பாடல்களையும்தான் கேட்கவேண்டும்!

விவசாயப் பகுதியினர் தினமும் விவசாயிகளுக்குப் பயன்தரும் யோசனைகளை வானெலிமூலம் காலையில் அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்குப் பயன்கிடைக்கும். நாட்டின் பொருளாதாரமும் விருத்தியடையும்.

## யாழ்.நகரில் இன்று அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

மறைந்த தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று கண்டி வீதி கச்சேரிக்கருகாமையில் மாலை 5-மணிக்கு சட்டத்தரணி திரு. வெற்றிவேல் யோகேஸ்வரன் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டணி செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. தர்மலிங்கம் எம்.பி, திரு. நடராஜா, திரு. ஆ. துரைராசசிங்கம் மற்றும் சிறைமீண்ட இளைஞர்கள் உரைநிகழ்த்துவர். (கெ-அ)

## பொதுப்பணி மன்றம்

வேலணை, ஞாயிறு

வேலணை கிழக்கில் முருகமூர்த்தி பொதுப்பணிமன்றம் என்ற புதிய சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பின்வருவோர் இம்மன்றத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. சிவதாசன். உபதலைவர்: திரு. ந. சிவகடாட்சம். இணைச் செயலாளர்கள்: க. கனகேஸ்வரன், திரு. கு. அமிர்தலிங்கம். பொருளாளர்: க. கலைச்செல்வன் உபபொருளாளர் திரு. க. பாலச்சந்திரன். கணக்குப்பரிசோதகர்: திரு ஐ. ராஜகோபால். செயற்குழு உறுப்பினர்களாக அறுவர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## மக்கள் அவதி

அரியாலை, ஞாயிறு

நல்லூர் செம்மணி மயானத்தில் அமைக்கப்பட்ட தங்கு மண்டபம் கூரையில்லாத நிலையில் காட்சியளிக்கிறது.

மயானத்திற்கு ஈமக்கிரியைகள் செய்ய வருபவர்கள் பெரிய தங்குமண்டபம் இருந்தும், அதற்கு கூரையில்லாத காரணத்தால் வெய்யில் மழையினல் அவதியுற நேரிடுகிறது.

இந்த மண்டபத்திற்கு போடப்பட்டிருந்த தகரங்களைக் கள்வர் கழற்றிச்சென்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த மண்டபத்தை திருத்தும் வேலைகளையும் கண்காணிக்கும் வேலைகளையும் கோப்பாய் கிராம சபை உடன் மேற்கொள்ள வேண்டுமென்று பொது மக்கள் கேட்டுக் கொள்கிருர்கள். (உ)

# ஐம்பதுக்கு ஐம்பது முதல் தனிநாடுவரை தமிழர் நிலை

[தமிழர்—சிங்களவர் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கடந்த 75 வருடங்களாகச் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் முயற்சிகள் பற்றி 1968-ம் ஆண்டில் ஆட்சிமன்றத்தில் தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தலைவர் திரு. வ. நவரத்தினம் நிகழ்த்திய உரை விவாத மேடைக்கு வருகிறது. இன்று திரு. நவரத்தினம் எழுதியுள்ள முன்னுரையை இங்கு தருகிறோம். ஆ-ர்.]

## சிந்தனைக்குச் சில கருத்துக்கள்

நாட்டிலே தேர்தல் காய்ச்சல் பிடித்துவரும் இந்த நேரத்தில் மக்கள் சரியாகச் சிந்திப்பதற்காக சில கருத்துக்களை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தேர்தல் போட்டிகள் சமுத்திரத்திலே எழுகின்ற அலைகளைப் போன்றன. நமது கால்களைக் கெட்டியாகத் தரையிலே ஊன்றி நிற்காவிட்டால் நம்மைத் தள்ளி வீழ்த்திவிடும். தமிழ் மக்களாகிய நமது நிலை என்ன, நமது பிரச்னைகள் என்ன. நமது லட்சியம் என்ன, இனத்தின் வருங்காலத்தை எப்படி அமைக்கப்போகிறோம் என்பனவற்றை நன்ருகச் சிந்தித்து அதன்படி செயல்படாவிட்டால், இந்தத் தேர்தல் போட்டிகள் நமது இலட்சியத்தை அடைவதற்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக பிழையான வழியில் திசை திருப்பிவிடும்.

சிங்களவர்-தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்காக கடந்த எழுபத்தைந்து வருடகாலமாக சகல யுக்திகளையும் கையாண்டு ஆகிவிட்டது. சட்டசபையில் சமபல பிரதிநிதித்துவம், சமஷ்டி அரசியல்முறை, பிராந்திய சபைகள் மாவட்டசபைகள் என்று இப்படியாகப் பலப்பல யோசனைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி ஆகிவிட்டது. கடைசியாக இப்பொழுது, நாம் பிரிந்து சுயாட்சி உரிமையும் இறைமையும்கொண்ட தமிழ் இலங்கை நிறுவுவது ஒன்றே அழிவிலிருந்து நமது இனத்தைக் காத்துக் கொள்வதற்கு வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்த முடிவை மனப்பூர்வமாக உள் அந்தரங்க சுத்தியோடு ஏற்றுக்கொள்பவர்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்கு எல்லாவிதங்களிலும் உழைக்கவேண்டும்.

### ஒப்பந்தங்களில் நம்பிக்கை

இடையிலே பொதுத் தேர்தல் வருகிறது. மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? கடந்த எழுபத்தைந்து வருடங்களாக நடந்த சரித்திரத்தை ஆராய்ந்து, அதைப்பற்றி சிந்தித்து நடந்துகொள்ளட்டும் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒப்பந்தங்களில் நம்பிக்கை வைத்து பொறிக்கிடங்குகளில் விழக்கூடாது. ஒன்பது வருடங்களுக்கு முன்பு 1968-ம் ஆண்டிலே பாராளுமன்றத்தில் மாவட்ட சபைகள் பற்றி நடந்த விவாதத்திலே நான் பங்குபற்றி நிகழ்த்தியஉரையை பின்னல் தருகிறேன். அதிலே இந்த எழுபத்தைந்து வருடகால சிங்களவர்-தமிழர் ஒப்பந்தங்களின் சரித்திரம் தொகுத்து விரிவாக உரைக்கப்பட்டுள்ளது. அரசியல் இயக்கங்களில் ஈடுபடுபவர்களும்

**விவாத மேடை**

அரசியல் மாணவர்களும் நமது வரலாற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். பொறுமையுடன் வாசித்து அதைத் தெரிந்துகொள்ளட்டும். நம்பி நம்பி மோசம்போன இனம் நாம். இனிமேலும் ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது பலவாறு பேசிக் கொள்ளப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தை, ஐக்கியதேசியக்கட்சியுடன் பேச்சுவார்த்தை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் பேச்சுவார்த்தை, என்றே குழிதோண்டிப் புதைத்த வட்டமேசை மகாநாடு யோசனை இப்படியெல்லாம் கேள்விப்படுகிறோம். வேதாளம் பழையபடி முருக்க மரத்தில் ஏறிய கதையாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. கடந்தகால அனுபவம் நமக்கு நல்ல படிப்பினையைத் தராவிட்டால் அனுபவம் இருந்தென்ன? சரித்திரம் படித்தென்ன? இன்னும் ஒப்பந்தங்கள் செய்யப்போகிறோமா? இதை நினைக்கும் பொழுதுதான் மனதிலே அச்சம் தோன்றுகிறது. வருங்காலத்திலே தென்னிலங்கைத் தலைவர்கள் எங்கெங்கே பொறிக்குழிகள் பறிக்கப்போகிருர்களோ தெரியாது. இவற்றைத் தெரிந்துகொண்டு மாற்று நடவடிக்கைகளை எடுக்க உதவும் என்பதற்காகத்தான் பாராளுமன்றம் போவது. அங்கே தமிழ் இலங்கை கிடைக்கும் என்றல்ல.

கடந்த எழுபத்தைந்து வருடங்களில் சிங்கள-தமிழ் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளினலே பயன் அடைந்தவர்கள் சிங்களமக்கள்தான் தமிழர்களின் உதவியுடன் தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டார்கள். தமிழர்களோ வெறுங்கையோடு வந்ததுதான் மிச்சம். கடைசியாகச் செய்த ஒப்பந்தம் கூட, அதன் துணைகொண்டு திரு. டட்லி சேனநாயக்கா தமிழர்களின் சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் பெற்று மூன்றேகால் லட்சம் தமிழர்களைக் கப்பல் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்ப வழிவகுத்தார். இலங்கையில் இருக்கும் தமிழர்கள் நாய்ப்பட்டி கட்டிக்கொண்டு திரியச் செய்தார். தமிழர்களுக்கு கிடைத்தது ஒன்றுமேயில்லை இவ்வளவையும் செய்து கொண்டபின் தமிழர்களை வெறுங்கையோடு அரசாங்கத்திலிருந்தே வெளியேற்றினர்.

மக்கள் இந்தச் சரித்திரத்தைத் தெரிந்துகொண்டு இப்போதைய நிலைமையில் நடந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பத்தினல் அந்தப் பாராளுமன்ற உரை இங்கே தரப்படுகிறது.

**வ. நவரத்தினம்.**
(தலைவர்,
தமிழர் சுயாட்சிக்கழகம்)

## கல்வி, பொருளாதாரம், வரலாற்று துறைகளில் பட்டம் பெற்றவர்



த. இராசலிங்கம்

உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளராக தமிழர் கூட்டணியால் நியமிக்கப்பட்டுள்ள அல்வாயைச் சேர்ந்த திரு. த. இராசலிங்கம் பொருளாதாரத் துறையில் பி. ஏ. பட்டத்தையும் வரலாற்றுத்துறையில் எம். ஏ. பட்டத்தையும், கல்வித்துறையில், டிப்ளோமா பட்டத்தையும் பெற்று கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பின்னர் கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், கலைத் துறைத் தலைவராகவும் இருந்து சுமார் 14 ஆண்டுகள் கல்வித் துறையில் ஆசிரியராகப் பணி புரிந்தவர்.

அரசாங்கப்பாடநூல் பிரசுர சபையின் சரித்திரம், புதைபொருள் ஆராய்ச்சித் துறைக் கலைச்சொல் ஆக்கக் குழுவில் முக்கிய உறுப்பினராகவும், கல்வி அமைச்சின் பாடநூல் மதிப்பீட்டுச் சபையின் சமூக இயல் துறைக்கும் பொறுப்பாளராயும், கல்வி, கலாச்சார அமைச்சின் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் முக்கிய உறுப்பினராகவும் கடமையாற்றினர்.

திரு. ராசலிங்கம் அனுபவம் பெற்ற கல்வி வல்லுநர் மட்டுமல்லாமல் அகில இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவராகவும், கொழும்பு ஆசிரியர்சங்க உபதலைவராகவும்நீண்டகாலம் பதவிவகித்து இந்தநாட்டில் கல்வி அபிவிருத்தியில் அளப்பரிய சேவையாற்றியவர். ஆர்வமும், எழுச்சியும் நிறைந்த பிரபல சமூக சேவையாளரான இவர் குறிப்பாக இந்நாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழருடைய கல்வி பொருளாதார அபிவிருத்தியில் மிகுந்த அக்கறையும் ஆர்வமுமுடையவர். அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர்மகாசபையின் கொழும்புக் கிளை உபதலைவராக பதவி வகித்து சமூகப் பிரச்னைகளுக்கு விடிவுகாணும் நோக்கமாக ஆட்சியாளர்களின் முன் பல தூதுக்குழுக்களுக்குத் தலைமையும் தாங்கி ஆக்கம் பல புரிந்தவர்.

### சென்ற தேர்தல்

1970-ல்நடைபெற்ற பொதுத்

(6-ம் பக்கம் பார்க்க)

### சட்டசபைத்தேர்தலில்

# ஜனதா - தி. மு. க. உறவு நீடிக்க மாட்டாது

## பிரதமர் தேசாய் அறிவிப்பு

பம்பாய், மே 8

**ஜனதா கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமிடையில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலின் போது தேர்தல் உடன்பாடு எதுவும் இருக்க மாட்டாது.**

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இந்த தகவலை பம்பாயில் நேற்றுத் தெரிவித்தார்.

தி. மு. க. ஜனதா தேர்தல் உறவின் எதிர்காலம் குறித்து பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த லோகசபைத் தேர்தலின்போது செய்து கொள்ளப்பட்ட தி. மு. க. ஜனதா உடன்பாடு அத்தேர்தலுடன் முடிந்து விட்டது என்றும் திரு. தேசாய் கூறினர்.

### மொரார்ஜி

# தேர்தல் உறவுமுறிவுக்கு தி. மு. க. காரணமல்ல

## கருணாநிதி விளக்கம்



சென்னை, மே 8

சட்ட சபைத் தேர்தல்களின் போது தி. மு. க.- ஜனதாகட்சி தேர்தல் உடன்பாடு இல்லாமல் போவதற்கு எதுவிதத்திலும் தி. மு க காரணமல்ல என்று தி. மு க. தலைவரும் முன்னாள் தமிழக முதல்வருமான திரு. மு கருணாநிதி தெரிவித்தார்.

தி. மு. க - ஜனதா உறவு குறித்து திரு. தேசாயின் கருத்து பற்றி நிருபர்கள் கேட்டபோதே திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினர்.

### அவகாசம் போதாது

நடந்துமுடிந்த லோகசபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களைச்செய்வதற்கு அப்போதைய இந்திரா அரசு அளித்த அவகாசங்களைவிட இம்முறை சட்ட சபைத் தேர்தல் ஏற்பாடுகளுக்காக அளிக்கப்பட்டுள்ள அவகாசம் போதுமானதாகஇல்லை என்றும் திரு. கருணாநிதி வருத்தம் தெரிவித்தார்.

சட்ட சபைத் தேர்தல்களுக்கான கட்சி வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கும் மாற்றுக் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடுகளைச் செய்வதற்கும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அரசினல் வழங்கப்பட்டுள்ள இந்த அவகாசம் போதுமானதாகஇல்லை என்றும் திரு கருணாநிதி கூறினர்.

### விசேஷ தேர்தல் அறிக்கை

இம்மாதம் 15ம் திகதி மதுரையில் நடைபெறும் தி. மு. க. சிறப்பு மகாநாட்டில் விசேட தேர்தல் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார். (இ)

# ஜூன் மாத நடுப்பகுதியில் சட்டசபை தேர்தல்

## தேர்தல் கமிஷனர் தகவல்

புதுடில்லி, மே 8

ஜனுதிபதி ஆட்சி அமுல்செய்யப்பட்டுள்ள 1· மாநில சட்ட சபைகளின் தேர்தல் அடுத்த மாதம் 10ம் திகதிக்கும் 15ம் திகதிக்குமிடையில் நடைபெறும் என்று இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் திரு. பி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டதென்றும் ஓரிருதினங்களில் தேர்தலுக்கான இறுதித் திகதி தீர்மானிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனதா கட்சியை அங்கிகரிப்பது, அதற்கான ஒரு தேர்தல் சின்னத்தை ஒதுக்குவது குறித்து விரைவில் முடிவுசெய்யப்படும் என்றும் தெரிவித்தார் (இ)

# திரைப்படத் தணிக்கை மறுபரிசீலனை செய்யப்படும்

## ஜோர்ஜ்பெர்னண்டஸ் அறிக்கை

சென்னை, மே 8

திரைப்படத்தணிக்கைசட்ட திட்டங்கள் மறு பரிசீலனை செய்யப்படும்.

மத்தியதகவல்துறை அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் சென்னையில் தெரிவித்தார்.

திரைப்படத்தணிக்கைமுறை முற்றாக நீக்கப்படுமா? என்று பத்திரிகை நிருபர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப்பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தணிக்கை முறை எக்காரணம் கொண்டும் நீக்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் கூறினர்.

திரு. சஞ்சய் காந்தி துப்பாக்கிச்சூட்டு விவகாரம் குறித்த விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும் அவர் கூறினர். (இ)

## நேர்முகப் பரீட்சை ரத்து

யாழ்ப்பாணம், திங்கள்

வித்தியாதிபதிகள், அதிபர்களுக்கான உதவியாளர் நேர்முகப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இப்பரீட்சை நாளை 10 ம் திகதி கல்விக் காரியாலங்களில் நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இதுநகமைய படபகுதியிலிருந்து இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு யாழ். கல்விக் காரியாலயத்தில் இப்பரீட்சை நடைபெறுவதாயிருந்தது. ஆனுல் இப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இப்பதவிக்கு விண்ணப்பித்த சகல விண்ணப்ப தாரிகளுக்கும் கல்விப்பகுதி அறிவித்துள்ளது. (சி—அ)

# தமிழ்நாட்டிலும் ஒரு ஜனநாயகக் காங்கிரஸ்கட்சி

## அதிருப்தியாளர் உருவாக்கினர்

சென்னை, மே 8

ஜனதா கட்சியுடன் ஜனநாயக காங்கிரஸ் கட்சி இணைந்ததை எதிர்த்து தமிழ்நாட்டில் புதிய ஜனநாயக காங்கிரஸ் கட்சி ஒன்று உருவாகியுள்ளது.

புதிய கட்சிக்கு 'சமிழ்நாடு ஜனநாயக காங்கிரஸ் கட்சி' எனப் பெயர்சூட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக காங்கிரஸ்கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமாக அக்கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன் ராமும் பொதுச்செயலாளர் திரு. பகுகுணவும் ஜனதாகட்சியுடன் ஜனநாயக காங்கிரஸ் கட்சியை இணைத்துள்ளனர் என்று புதிய கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. நாஞ்சில் செல்வம் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஜனநாயகத்திற்காகத் தனித்துநின்று போராடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# பிரமானந்தரெட்டி காங்கிரஸ் தலைவர்

புதுடில்லி, மே. 8

திருமதி இந்திரா காந்தி அரசில் உள்துறை அமைச்சராக இருந்த திரு. பிரம்மானந்த ரெட்டி காங்கிரஸ் கட்சித் தலைவராகக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்று நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பதிவாகி செல்லுபடியான 496 வாக்குகளில் திரு. பிரம்மானந்த ரெட்டிக்கு 317 வாக்குகளும் திரு. சித்தார்த்த சங்கர்ராய்க்கு 160 வாக்குகளும் டாக்டர் சரண்சிங்குக்கு 16 வாக்குகளும் கிடைத்தன. இன்னுமொரு வேட்பாளருக்கு 3 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

### ரகுராமையா ராஜினமா

இதே வேளையில் திரு. பிரமானந்த ரெட்டி காங்கிரஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்த முன்னாள் ரயில்வே மந்திரி திரு. ரகுராமையா காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

நெருக்கடி நிலைக்குப்பொறுப்பான அமைச்சராக இருந்த உள்துறை அமைச்சர் காங்கிரஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது வியப்புக்குரியது என்றும் நெருக்கடி நிலையின்போது இடம்பெற்ற வரம்பு மீறிய செயலுக்கு அவரே காரணம் என்றும் திரு. ரகுராமையா காங்கிரஸின் தற்காலிகத் தலைவராக இருந்த திரு. சுவரண்சிங்குக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். [இ]

## தீண்டாமை ஒழிப்புக்கு ரூ. 70 லட்சம்

புதுடில்லி, மே 8

இந்திய அரசு தீண்டாமையை ஒழிக்க 70 லட்சம் ரூபாவை உதவிமான்யமாக ஒதுக்கியுள்ளது.

கடந்த வருடம் 60 லட்சம் ரூபா இதற்காக இந்திரா அரசு ஒதுக்கியிருந்தது. (இ)

......

## தி.மு.க.விலிருந்து ஆயிரம்பேர் ராஜினமா!

சென்னை, மே. 8

தி. மு. க.வைச் சேர்ந்த முன்னாள் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் வெள்ளைச்சாமி என அழைக்கப்படும் ஜனப் காதர் தலைமையில் ஆயிரம் பேர் தி. மு. க.விலிருந்து நேற்று ராஜினமாச் செய்துள்ளனர்.

தமது எதிர்காலம் குறித்து தாம் பின்னர் அறிவிப்பதாக அவர் தெரிவித்தார். (இ)

# திருநெல்வேலியில் புதிய நவீனசந்தை

## ரூ. 2 லட்சம் செலவில் அமையும்

யாழ்ப்பாணம், திங்.

திருநெல்வேலியில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் புதிய நவீன சந்தையொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. முன்னர் இருந்த கட்டிடம் முற்றாக இடிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதனுல் தற்போது சந்தை அருகாமையிலுள்ள காணியில் சந்தை நடைபெற்றுவருகிறது.

இப்புதிய கட்டிடத்திற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்ட அரசியல் அதிகாரிதிரு. சி. அருளம்பலம்ஒதுக்கியுள்ளார். (கு-இ)

## இருவர் நீக்கம்

நெல்லியடி ஞாயிறு.

தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் கொள்கைகளுக்கும், இலட்சியத்திற்கும் எதிராக நடந்த குற்றச்சாட்டின பேரில் இரு இளைஞர்கள் இளைஞர் பேரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் சிவா. கிருஷ்ணமூர்த்தி சதா. காந்திதாசன் ஆகிய இருவருமே இளைஞர் பேரவையிலிருந்து நீக்கப்பட்டவர்களாவர் இதனை பருத்தித்துறை தொகுதி தமிழ் இளைஞர் பேரவைக்கிளை அறிவித்துள்ளது. (அ)

## வீதிக்கு செல்வாபெயர்

மாவிட்டபுரம், ஞாயிறு

அமரர் செல்வநாயகத்தை நினைவு கூறும் வகையில் அவரது பெயர் வீதி யொன்றுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

முதன்முதலாக அவர் பெயர் சூட்டப்பட்ட பெருமையைப் பெற்ற வீதி கட்டுவன்-குரும்பசிட்டி வீதியாகும், அண்மையில் இதற்கான பெயர்பலகை நாட்டப்பட்டது. (அ)

# யாழ். ஆயுர்வேதக் கல்லூரி மாணவர் கூட்டத்தில் அமளிதுமளி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்களின் கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர் இக்கல்லூரி உருப்படாது எனக்கூறி வெளிநடப்புச் செய்தனர். அவர்களைத் தொடர்ந்து மாணவர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆயுர்வேத ஆணையாளர் கலந்துகொள்வார் எனக் கல்லூரி நிர்வாக அதிகாரி திரு கெங்காதரன் அறிவித்திருந்தார். ஆனால் ஆயுர் வேத ஆணையாளர் வரவில்லை. கூட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5மணிக்கு நடந்தது.

பிற்பகல் 2 மணி முதல் ஆணையாளர் வருவாரென மாணவர்களும், பெற்றோர்களும் காத்திருந்தனர். இவர்களில் அநேகர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்,

மாலை 5 மணிக்கு கூட்ட அழைப்பாளரான நிர்வாக அதிகாரி திரு. கெங்காதரன் வந்து 'ஆணையாளர் வேறு ஒரு தினத்தில் வருவார்' எனத் தெரிவித்தார்.

இதன் பின், இயக்குநர் சபைத் தலைவர் திரு. கே. அருளானந்தன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. மாணவர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

மாணவர் சங்கத் தலைவர் திரு. கே. வி. கே. திருலோகமூர்த்தி பேசும் போது நிர்வாக அதிகாரி 5 மணியாகியும் இங்குவராததினால் மாணவர்கள் ஏமாற்றமடைந்ததாகவும் இப்படியான போக்கினால்தான் மாணவரின் கோரிக்கை பயனளிக்கவில்லையென்றும் கூறினார்.

இயக்குநரான டாக்டர் பரஞ்சோதிநாதர் பேசுகையில் ''ஆணையாளர் வரமாட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமென்றும் இதனை அறியாத மாணர்கள் இப்படிக் கூடியிருக்கிறார்கள். நிர்வாகம் எப்படித்தான் இந்த சிக்கலை தீர்க்கப் போகிறது'' என்றும் சொன்னார்.

இயக்குநரான திரு. கே. சச்சிநாதனந்தசிவம் பேசுகையில் ''கல்லூரியின் எதிர்காலம் சிறக்க வேண்டுமானால் சகல சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும் நம்மை விட்டுப் பிரிந்து தனியாக நிற்பவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

கல்லூரி லிகிதர் திரு. த. இளங்கோவன் இக் கூட்டத்தில் பேச முற்பட்டபோது அவருக்கு அனுமதி வழங்கப் படவில்லை.

திரு. த. தவசீலன் பேசும் போது நிர்வாக அதிகாரிதன் சொந்தவிருப்பப்படிநடந்தபடியினால்தான் நமது போராட்டம் வெற்றி பெறவில்லையென்றும் மாணவர்கள் தவறான பாதையில் வழிநடத்தப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

நிர்வாக அதிகாரிக்கு எதிராகச் சிலர் பேசிய சமயம் கரகோஷம் செய்த மாணவிகள் பின்னர் நிர்வாக அதிகாரி பேசும் போதும் கரகோஷம் செய்தார்கள். ஒரு சிலமாணவர்களும் இப்படியே நடந்து கொண்டார்கள்.

கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த மாணவர்கள் நிர்வாக அதிகாரியோ, இயக்குநரோ தலையீடு இல்லாமல் மாணவர்கள் மட்டும் கூடி எதிர்காலம் பற்றி முடிவு செய்வது என்று தீர்மானம் நிறைவேற்றினர். (க-அ)

## பயிற்சிவகுப்புகள்

யாழ்ப்பாணம், திங்.

வடமாகாண வைத்திய அத்தியட்சகர் பிரிவின் கீழ் 62மாணவ அட்டென்டன்டுகளுக்கு தரம் I பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்புகள் மூன்றுமாதகாலம் தொடர்ந்து நடைபெறும் இப்பயிற்சிக்கு யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, ஊர்காவற்றுறை, கோப்பாய், உடுப்பிட்டி, மானிப்பாய், காங்கேசன்துறை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து மாணவ அட்டென்டுகள் வந்துள்ளனர்.

வகுப்புகள் முடிந்தபின்னர் தாதிகள் இல்லாத வைத்திய சாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படுவர் என்று யாழ். வைத்திய அத்தியட்சக) தெரிவித்தார். (கெ-உ)

## மாணவருக்கு சீசன்டிக்கட்

நெல்லியடி, ஞாயிறு

வடமராட்சிப்பகுதியிலிருந்து யாழ். தொழில் நுட்பக்கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களின் வசதியை முன்னிட்டு பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான பஸ் சீசன் டிக்கட்டுகள் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் வழங்கப்பட்டு வருகிறன.

வடமராட்சிப்பகுதிமாணவர்கள் இதுவரை காலமும் இச் சீசன் டிக்கட்டுக்களை யாழ். இ. போ. ச. டிப்போவில் பெற்று வந்தனர்.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. எம். பி/12781

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி ரோட்

1. தியாகராசா கந்தையா கைம்பெண் பாக்கியம் தனக்காகவும், அடுத்த கிட்டிய சொந்தக்காரர்களாள பராயமற்ற 2-ம், 3-ம் பெட்டிசகாரர்களுக்காகவும்
2. கந்தையா இத்திரேஸ்வரன்
3. கந்தையா யோகேஸ்வரன் இருவரும் கந்தர்மடம்.

வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் நல்லூர்

1. கந்தையா தங்கவடிவேலும் மனைவி
2. சுபத்திராதேவியும்

எதிராளிகள்

M. B. 12781-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க் காணும் ஆதனம் 1977-ம் வருஷம் மே மாதம் 31-ந் திகதி (31-5-77) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப் படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 4800/- இதில் 2500/- ரூபாவுக்கு 6-10-71 தொடக்கம் 18-12-73 வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீதவட்டியும் வழக்குச் செலவு ரூபா 636-30 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும் இதில் ரூபா 2500/- கழித்து மிகுதி

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறை ''பெரிய பனந்தோட்டம் சுடுகாட்டுப்புலமும் புதுவளவும்'' நில. பா. 3, குளிகள் 17½. இதில் மேற்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட நில. பர. 2, வீடும் பயிர்களும், கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும், கிழக்கெல்லைக்காணியின் வடக்கெல்லை நீட்டுக்கு கிணற்றுக்கு போய்வர உரித்தும். இதற்கு எல்லைக்காணிகள். கிழக்கு வல்லிபுரம் சுப்பையாவும் மனைவி சரஸ்வதியும், வடக்கு வயித்திலிங்கம் வியாகேசனின் உரிமைக்காரர்கள், மேற்கு சின்னத்தம்பி சுந்தரத்தின் உரிமைக்காரர்கள், தெற்கு ஒழுங்கை.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
நீதிமன்ற விற்பனை
ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

''இராசகிரி'',
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

6122

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 14946

1. முருகேசு இராமலிங்கமும்
2. பெண் நாகேஸ்வரியும் இருவரும்

காரைநகர் மேற்கு, கரரைநகர் — வழக்காளி

எதிராக

அம்பலவாணர் கார்த்திகேசு, அம்பிளா, பாலாவோடை காரைநகர். இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் கைம்பெண் பார்வதியின் ஆதனத்திற்கு சட்டப்பிரதிநிதியாக நியமிக்கப் பட்டவர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் MB 14946-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் வருஷம் வைகாசி மாதம்30-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 6673/ம் 1975-7-23 தொடக்கம்1976-11-12 வரைக்குல் ரூபாய் 5000/க்கு 5 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 749/34.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை 'அம்பிளா' உறுதிப்படி நிலப்பரப்பு 15 அளவின் படி நிலப்பரப்பு (17) பதினேழும் வீடுகள் பனைகள் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தசாமி மகள் இந்திராணிக்குரியவாதனமும் வடக்கு சுப்பர் கணபதிப்பிள்ளையினுதனமும் ஒழுங்கையும் மேற்கு ஒழுங்கை தெற்கு தன்னிலத்தில் விடப்பட்ட பதினுமுள அகலமான ஒழுங்கை இதடங்கலும். சொரியலாய் நிலப்பரப்பு (12) பன்னிரண்டும் அதற்குரியவைகளும் முற் பதிவு சி 174/76.

**எஸ். சங்கரப்பிள்ளை J. P.,**
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்,
2-5-77.

6123

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய்ரோட்டில், கச்சாய் கிராமசங்க அருகாமையால் போகும் வீதியில் 'செட்டியாவெளி' என்ற 32 பரப்பு மேட்டுநில மிளகாய் செய்கைக்குரிய காணி, கிணறு தொட்டிகள், 200 தென்னைகள், மா, வாழைகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளுங்கள்: மாரசிங்கா, உசன், மிருசுவில். 6112

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அண்மையில் சன்னதி வீதியில் முதலாவது வீடு ஐந்து பரப்பின் நவீன வசதிகளுடன் எட்டு அறைகள் கொண்டது. திருமதி பி. இராமலிங்கம், 145, சன்னதிவீதி, அச்சுவேலி. 6116

## தேவை

மிக நல்ல நிலையிலுள்ள பழைய மாடல் ஹம்பர் கோக், வக்ஷால், மொறிஸ்8, ஒஸ்றின் 8 கார்கள் தேவை. விலை விபரத்துடன் எழுதவும். ''மலரகம்'' ஏழாலை - வடக்கு ஏழாலை. 6128

## குத்தகைக்கு

ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில் வியாபாரத்தலங்களுக்கு ஏற்ற நான்கு அறைகொண்ட வீடும், கடை கட்டுவதற்கான வெற்று நிலமும் குத்தகைக்கு உண்டு. கடிதமூலம்தொடர்புகொள்க. விளம்பர இல: 6099 C/o ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 6099

## கல்வி

உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை) G. C. E. (A/L) H. N. C. E. கலை, விஞ்ஞானம், வர்த்தகம், இரசாயனம், பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலியபாடங்களுக்கு செய்கைமுறைப்பயிற்சி (Practical) அளிக்கப்படும். G. S. Q. தூயகணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபரஇயல், இரசாயனம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்கைமுறைப் பயிற்சியும் (Practical) அளிக்கப் படும். பதிவாளர் The College of Higher Studies ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6102

H. N. C. E. முதலாம், இரண்டாம் வருடத்துக்குரிய விஞ்ஞான, வர்த்தக, பாடங்கள் சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. உடன்சேரவும். விபரங்கட்கு:- இ. இரத்தினகோபால், இல. 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 6121

## வகுப்புகள்

ஆங்கில விசேட வகுப்புகள் 1977 டிசம்பர் மாதம் க. பொ. த. (சாதாரண) தேர்வு ஆங்கில பாடத்திற்கு தோற்றவிருக்கும் பரீட்சாத்திகளுக்கான வகுப்புகள் இம்மாதம் 16-ந் திகதி (16-5-77) ஆரம்பமாகும். மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். கணக்கியல் கல்லூரி, 57, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 6129

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சி வகுப்புகள் 14-ந் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. க. பொ. த. பரீட்சையில் ஆறுபாடங்கள் சித்தி அடைந்த மாணவிகள் சான்றிதழ்களுடன் புதன்கிழமை 11-ந் திகதி பிற்பகல் 2மணிக்கு நேரில் வரவும். மாதாந்தக்கட்டணம் ரூபாய் ஏழுமட்டும். பாலர் கல்விக்கழகம், இல. 77 அரசடிவீதி, யாழ்ப்பாணம். 6120

## CLASSES

ICMA, ACCA November 1977 weekend classes just commenced. Time Saturdays 2 to 5 pm Sundays 8 to 12 am at the Education Centre No. 22, Ramaiah Chettiar Lane, Hospital Rd., Jaffna. 6131

# கேள்வி விளம்பரம்

## காரைநகர் தெற்கு இராமப்பிரதேசம்

1. 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-5-1977-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிவரை கீழ்வரும்வீதிவேலைகளுக்கு காரைநகர் தெற்கு கிராமப்பிரதேச விசேட ஆணையாளரால் அரக்கு முத்திரைவைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-ம், கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-உம் கட்டியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் 19-5-1977-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரைஎன்னால் வழங்கப்படும்.
3. கேள்விப்பத்திரத்தின் பிரதி பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அதே திகதியிலும், நேரத்திலும் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.
4. இதுசம்பந்தமான விபரங்கள் யாவும் எமதுகிராமப்பிரதேச அலுவலகத்திலும், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. வீரக்குளம் விதி
2. கேசடை வீதி
3. காளிகோவில் வீதி

**வே. மாரிமுத்து**
விசேட ஆணையாளர்,
கிராமப் பிரதேசம்,
காரைநகர் தெற்கு.

கிராமப்பிரதேச அலுவலகம்,
காரைநகர் தெற்கு,
காரைநகர், 5-5-1977.

6124

## அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 12,000 வெற்றுச் சாக்குகள்கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு உண்டு. 77-05-13 ஆம் திகதி காலை 10-00 மணிக்குமுன்னதாக ரூபா 200/- மேற்படி சங்கத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திரம் 77-05-13-ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**பொது முகாமையாளர்**
தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்.

6130

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

RIO NOW SHOWING
(Jaffna) Daily 4 Shows
OUR MAN IN HAWANA
(Suspense – Thrill)

98 வது வெற்றித் தினம்!
மனோகரா எம.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராணி யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
புரட்சித்தலைவர்
∴ எம். ஜி. ஆர் ∴ லதா
(இரு வேடங்களில்)
ஃ நிர்மலா ஃ நாகேஷ் ஃ ராஜ்ஶ்ரீ
கஜேந்திரா பிலிம்ஸாரின்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி சில தினங்கள்
ஶ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார் – லதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 5-ம் தேதி ஆரம்பமான யாழ்ப்பாணம் இந்து இளைஞர் மன்றத்தின் கொடிவிற்பனை பொலிஸாரின் விசாரணையைத் தொடர்ந்து நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

# யாழ். இந்து இளைஞர் கொடி விற்பனைக்குத் தடை!

இலங்கை இந்து இளைஞர் பேரவை இம்மாதம் 6-ம் தேதி நாடு முழுவதும் கொடித் தினத்தை ஆரம்பிக்கவிருந்தது. இதேசமயம் யாழ்ப்பாணத்தில் 5-ம் தேதியே யாழ். இந்துஇளைஞர் மன்றத்தினர் கொடிவிற்பனையை பிறம்பாக ஆரம்பித்தனர்.

இதுபற்றி இலங்கை இந்து இளைஞர் பேரவைப் பொதுச் செயலாளர் திரு. கே. சச்சிதானந்தன், கொழும்பில்பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து அவர் இதுபற்றி விசாரணை செய்யுமாறு யாழ். பொலிஸ் அதிபரைப் பணித்திருந்தார். இதேசமயம் நல்லூர் இந்து இளைஞர் மன்றத் தலைவர் டாக்டர் வே. யோகநாதனும், யாழ். பொலிஸ் அதிபருக்கு இவ்விஷயமாக புகார் செய்திருந்தார்.

உடனடியாக பொலிஸார் கொடி விற்பனை செய்யும் தொண்டர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்த முயற்சி எடுத்தனர். தொண்டர் எவரையும் காணாததனல் யாழ். இந்து இளைஞர்மன்றத் தலைவர் சட்டத்தரணி இராஜேஸ்வரன் தங்கராசாவை, பொலிஸார் விசாரணைக்குட்படுத்தினர்.

அன்றுமாலை பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. பத்மநாதன் விசாரணை நடத்தினார். சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசா மற்றும் இதுபற்றிப் புகார்செய்த நல்லூர் இந்து இளைஞர்மன்றத் தலைவர் டாக்டர் வி. யோகநாதன், செயலாளர் திரு. தனபாலசிங்கம், திரு. இரத்தினகோபால், சட்டத்தணி பாலசுப்பிரமணியம் ஆகியோர் அழைக்கப்பட்டு இருசாராரும் தங்கள் நிலையை எடுத்துக்கூறினர்கள். யாழ். இந்து இளைஞர் மன்றத்தினருடன் தேவையான தஸ்தாவேஜுகள் இல்லையென இவர்கள் புகாரில் தெரிவித்தனர்.

உறுப்பினர் விண்ணப்பம், வங்கிக்கணக்கு, அமைப்புவிதி, கூட்டஅறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பித்து முறையான இயக்கமாக உறுதிப்படுத்து மாறுபொலிசார்சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசாவிடம் கோரியதாகவும். அதற்கு அவர் ஒருநாள் அவகாசம் கேட்டதாகவும் பின் மறுநாள் அவர் திருபிக்கவில்லையென்றும் தெரியவருகிறது.

முறையாக இயக்கம் இயங்கியதாக உறுதிப்படுத்தும்வரை இந்து இளைஞர்கொடி விற்பனையைப் பொலிசார் நிறுத்தி வைத்துள்ளனர். (ஈ-அ)

## யாருடையது?

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த நான்கு கூப்பன்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் — சாவித்திரி
மகாதேவி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
பாலச்சந்திரன் – சுபாஷினி
பொன்மணி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெயலலிதா
கலாட்டா
கல்யாணம்

REGAL ஜனத்திரள் நிறைந்த
(JAFFNA) காட்சிகள்
Daily at 4-45, 7-00 & 9-30 p. m. only
அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்ாதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)
Coming ALFIE DARLING

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஃ உஷா நந்தினி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்!
இது ஞானவேல்! யாவும் நிறைந்த தங்கவேல்!
வருக! வருக! நீ மயிலேறி வருக!
தென்னகத்தில் திரையிடப்பட்ட திரையரங்குகளில் கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி முழக்கம் இட்டதே! தேவரின் "திருவருள்"

திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணாத கண்ணென்ன கண்ணே?

ராஜா- யாழ்நகர் தினசரி 4 காட்சிகள்
நடிப்புச்சுடர்: ஏ. வி. எம். ராஜன்
திருமுருக கிருபானந்தவாரியார் நாகேஷ்,
சுந்தரராஜன, தேங்காய் சீனிவாசன்,
ஜெயா, பேபி இந்திரா நடித்த
ஃ தேவரின் எண்ணத்தில் உருவாகிய ஈஸ்ட்மன் வண்ணத்தில் மலர்ந்திருப்பதுதான்!
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்



இசை:
குன்னக்குடி
வைத்தியநாத

கதை-வசனம்-தயாரிப்பு:
சாண்டோ
M.M.A சின்னப்பாதேவர்

ஈழநாடு
The EELANADU

# தமிழ்நாடு தேர்தல் ஜூன் நடுவில்!

சென்னை, மே. 8
தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 12-ம் 14-ம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலுக்கான வேட்பாளர் மனுத்தாக்கல் செய்வதற்குரிய இறுதித் திகதி இம் மாதம் 18-ம் திகதியெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மனுப் பரிசிலனை இதற்கு அடுத்த நாள் நடைபெறும்.

வேட்பாளர் மனுவை வாபஸ் பெறுவது இம்மாதம் 21-ம் திகதியாகும்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 234 தொகுதிகளிலும் ஜூன் 12 ம் திகதி 120 தொகுதிகளில் தேர்தல் நடைபெறும்.

ஜூன் 14-ம் திகதி சென்னை உட்பட மீதமுள்ள தொகுதிகளில் வாக்கெடுப்பு நடைபெறும்.

வாக்குகள் எண்ணப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தமிழ்நாடு அரசின் பத்திரிகை குறிப்பு ஒன்று கூறியது.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 24 இடங்களில், 5000 வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்பு நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. ஓஸா தெரிவித்தார்.

### தி.மு.க.வுடன் எத் தொடர்பும் இல்லை

இதேவேளை, தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க வுடன் ஜனதாகட்சி எந்தவித உடன்பாடும் வைத்துக் கொள்ளாது என்று அக் கட்சியின் பொதுச்செயலாளர் தேஷ்முக் இன்று புதுடில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

வேறு கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு குறித்து ஜனதா கட்சியின் தலைமைப் பீடம் முடிவு செய்யும் என்று மத்திய அமைச்சர் திரு பி. இராமச்சந்திரன் கூறினார்.

### எம்.ஜி.ஆர் கட்சி கூட்டம்

திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயற் குழுக் கூட்டம் இம்மாதம் 12-ம் 13-ம் திகதிகளில் சென்னையில் நடைபெற விருக்கிறது. கட்சியின் வேட்பாளர் பற்றி இம் மாதம் 10-ம் திகதி ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# 'நோய்நீங்கி மன அமைதிக்கு ஆழ்நிலைத் தியானம்'

## மகேஷ்யோகியின் சிஷ்யர் யாழ்ப்பாணத்தில் பயிற்சி தருகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்
"ஆழ்நிலைத் தியானம் அனுஷ்டிப்போர் தொகை உலகில் அதிகரித்து வருகிறது. மொத்தம் 65 நாடுகளில் இப்போது 25 லட்சம் பேர் ஆழ்நிலைத்தியானம் அனுஷ்டித்து வருகின்றனர்."

இவ்வாறு மகிரிஷி மகேஷ் யோகியின் சிஷ்யரான திரு எஸ். இராஜேந்திரா ஆழ்நிலைத் தியானம் பற்றி நேற்று முன்தினம் மாலை விசேஷ சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். இச்சொற்பொழிவு யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் உள் மாணவர் தர்ம இல்லத்தில் இடம்பெற்றது. தொழிலதிபர் எஸ். தியாகராஜா தம்பதிகள் உட்படப் பலர் இச்சொற்பொழிவைக் கேட்பதற்கு வந்திருந்தனர்.

திரு. இராஜேந்திரா மகிஷியிடம் மூன்று வருடங்கள் நேரடியாகப் பயிற்சி பெற்றவராவர். திரு. ராஜேந்திரா தமது சொற்பொழிவில் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

"இலங்கையில் 2400 பேர் ஆழ்நிலைத்தியானத்தில் நம்பிக்கை வைத்து அனுஷ்டித்து வருகின்றனர். இவர்களில் 85 வீதத்தினர் டாக்டர்களாவர்.

ஆழ்நிலைத்தியானம் இனம், மதம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டது. ஆண்களும் பெண்களும் இதனை அனுஷ்டிக்கலாம். ஆழ்நிலைத்தியானம் மூலம் மனஅமைதி ஏற்படுகிறது. நுண்ணறிவு, ஆராய்ச்சி ஆகியன இதற்கு வேண்டியதில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை இதனை அனுஷ்டிக்கலாம். கல்வித் தரம், பொருளாதாரத் தரம், சமூகத்தரம் எதுவும் தேவையில்லை. இதனைக் கற்றுக்கொள்வது மிக இலகுவாகும். கற்றுக்கொடுப்பதும் இலகுவாகும். ஒருவார காலத்தில் இதனைப் பழகிக்கொள்ளலாம். இதற்கு மனக்கட்டுப்பாடு, சுய எண்ண வழிப்படுத்தல், விரத அனுஷ்டானங்கள் அவசியமில்லை. காலைமாலை இருபது நிமிடநேரம் மட்டுமே இதற்குத் தேவை. ஆனால் ஏற்படும் பலனோ அனந்தம். நரம்பு மண்டலத்தின் சோர்வை ஆழ்நிலைத் தியானம் அகற்றுவதன்மூலம் புதிய உற்சாகமும் அமைதியும் ஏற்படுவதுடன் புதிய சக்தியை அளித்து வாழ்வை மேம்படுத்துகிறது. மதுபானம், புகைத்தல், போதைவஸ்து முதலான தீயவழக்கங்களின் நினைப்பை இது அடியோடு மறக்கச் செய்துவிடுகிறது. தொய்வு, இரத்த அழுக்கம் உட்படப் பல நோய்களையும் சூழ்நிலைத்தியானம் நீக்குகிறது. மேலைநாட்டினர் இது பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி இதன் உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளனர். கத்தோலிக்கர்களும் இஸ்லாமியர்களும் பௌத்தர்களும் சைவர்களும் மற்றும் மதத்தவர்களும் ஏராளமானவர்கள் ஆழ்நிலைத்தியானத்தின் மூலம் அதிக பயனைப் பெற்றுள்ளனர்".

இப்போது தினசரி 4-30 மணி தொடக்கம் பண்ணை சைவ மாணவதர்மஇல்லத்தில் ஆழ்நிலைத்தியானப்பயிற்சிஅளிக்கப்பட்டுவருகிறது. ஒருவாரத்திற்கு இப்பயிற்சி இடம்பெறும் புதிதுபுதிதாகப் பலர் சேர்ந்து வருகின்றனர். திரு. இராஜேந்திராவுக்கு உதவியாக நல்லூர் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இளைஞரான திரு. க. ரவீந்திரன் பணியாற்றி வருகிறார்.

சைவ மாணவர் தர்ம இல்லப் பொறுப்பாளர் சகோதரர் பிர. பாலகிருஷ்ணனின் ஏற்பாட்டின் மீது இப்பயிற்சி நடைபெற்றுவருகிறது. (கூ-அ)

### கல்வி...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலில் அரசியல் சார்பற்ற முறையில் தமிழர் சார்பில் போட்டியிட்டு தமிழரசுக்கட்சி-தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் அரசியல் கருத்துவேறுபாடுகளுக்கு அப்பால்தொண்டு செய்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், தந்தைசெல்வா ஆகியோரது பூரண ஒத்துழைப்பையும், பூரண ஆதரவையும் பெற்றபெருமை இவரையே சாரும்.

கல்வி வரலாற்றில் வட்டாரக் கல்வி அதிகாரியாகப்பதவி வகிக்கும் முதலாவது சிறுபான்மைத் தமிழர்சமூகத்தைச் சேர்ந்த இவர், கடந்த நான்கு வருடங்களாக உடுப்பிட்டித் தொகுதியில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். (கா)

## சிங்கள மாணவியர் கலாசாரத்தூது

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் சிங்களப் பாடசாலை மாணவிகள் வெசாக் தினத்தை யொட்டி யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று வெசாக் கீதங்களை இசைத்தனர்.

### சிற்பவரைவாளர்
### ARCHITECTURAL DRAUGHTSMANSHIP

1 வருடகால முழுநேர வகுப்புக்கள், 9 பாடங்கள் கொண்ட இத் தொழில் நெறியை கற்கும் மாணவ, மாணவிகள் உள்நாட்டிலும், பிறநாட்டிலும் அதிக உத்தியோக வாய்ப்பு காண்கிறார்கள்.

விபரங்கட்கு:
காரியதரிசி,
அக்ரே என்ஜினியேஸ்,
135, செல் பற்றிக்ஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.

வகுப்பு ஆரம்பம்: 23- 5- 77 6126

### வெல்டிங் வகுப்புகள்

அமெரிக்கன் வெல்டிங் சொசாயிற்றியின் (AWS)பாடதிட்டத்தை அனுசரித்து நடாத்தப்படும் ARC வெல்டிங் வகுப்புகளுடன் ஆங்கிலமும் இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:
காரியதரிசி,
அக்ரே என்ஜினியேஸ்,
135, செல் பற்றிக்ஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.

6127

### மரண அறிவித்தல்

#### திருமதி மேரி அன்ன யோசேப்பு

திருமதி மேரி அன்ன யோசேப்பு [ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ். புனிதர் சாள்ஸ் வித்தியாலயம்] காலமாகிவிட்டார். இவர் திரு. ஜெகேஷன் யோசேப்பு(அதிபர், யாழ். நாவாந்துறை ரோ.க. வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், வில்வராஜ் (ஆசிரியர் செல். பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு) அமலராஜ் (U. K.) திருமதி சாந்தி இம்மானுவல், யாழ். திருக்குடும்ப கன்னியர்மட மாணவிகள்: ராஜினி, யோகினி, திருமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மாசில்லா மனுவேல்பிள்ளையின் மகளும், திரு ம. சி. பிரான்சிஸ் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) திருமதி மேரி திரேசா இம்மானுவல் (ஆசிரியை, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், திரு. விக்ரர் இம்மானுவேல் (F. P. L., ஹெக்கிருவை) அவர்களின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 9-5-77 திங்கள் மாலை 4-30க்கு 2/1, கோவில் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

யாழ்ப்பாணம்.
8-5-77. 6132

### தேர்தலுக்கு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
சேவைகள் பலவற்றில் மக்கள் வங்கியின் முற்போக்கான சேவையும் ஒன்றாகும். ஆயினும் இன்றைய அரசாங்கம் தம்தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய வாக்குறுதிகளில் நிறைவேற்றாது விட்டவையும் உண்டு.

குடியேற்ற நாட்டுக்கான கச்சேரி முறையையொழித்து, அதிகாரத்தைப் பரவலாக்கி ஜனநாயகப்படுத்தப்பட்ட நிர்வாகம் ஒன்றை அமைப்பது என்ற வாக்குறுதியை இன்றைய அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது.

அரசாங்கத்தில் முன்னர் அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி என்ற கூட்டணி அமைப்பில் இருந்தவர்கள்கூட இதனை நிறைவேற்ற முன்வரவில்லை. இது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

கச்சேரியிலோ வங்கிகளிலோ காசோலைகளைத் தமிழில் எழுதும் உரிமை இன்னமும் கிடைக்கவில்லை. தமிழரின் பாரம்பரியத்தை நிலைநாட்டும் வகையில் நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருக்க வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்தக்கூடியதாக உள்ளது.

#### கனவிலும் கருத முடியாதது

அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கு உரிய இடமளிக்கப்பட்டு, தமிழை நிர்வாக மொழியாக்கி தமிழ் பிரதேசங்களில் சுயாட்சி அமைப்பை உருவாக்குப்வரை இவ்வுரிமைகள் நடைமுறைக்கு வரும் என்று கனவிலும் கருத முடியாது.

#### வட்டமேசை மாநாடு கூட்டுக

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த சகல தேசிய கட்சிகளும் தமிழ் மக்களின் தீராத பிரச்னைகளை தீர்த்து தமிழ் மொழியை அங்கீகரித்து சுயாட்சி போன்ற கொள்கையை ஏற்கும் வகையில் தேர்தலுக்கு முன்னரே ஒரு வட்டமேசை மாநாடு கூட்டி தமிழரின் பிரச்னைகளை அரசியல்பகடைகாய்களாகதேர்தலில் பயன்படுத்தாமல் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழரின் பிரச்னைக்குத் தீர்வு காண்பது அவசியமானதாகும்.

இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் இச் சின்னஞ்சிறு நாட்டில் விபரீத விளைவுகள் ஏற்படுவது திண்ணம்.

#### செயல்வடிவம் பெறவேண்டும்

இதனை உணர்ந்து சகல சிங்கள தேசியக் கட்சிகளும் முன்வந்து தமிழர் பிரச்னைக்கு உடன் தீர்வு காண முயல்வது அவசியமானது. இதனை விடுத்து வெறுமனே மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தி புகழுரை கூறுவதால் எவ்வித பலனுமில்லை. அது வெறும் வேஷமாகவே இருக்கும் தென்னிலங்கைத் அரசியல் தலைவர்கள் தாம் இங்கு வந்து புகழுரை கூறுவதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் மறைந்த தலைவரது இறுதிக் கிரியையின் போது திரண்ட ஜனசமுத்திரம் என்ன அபிலாஷைகளைப் பிரதிபலித்ததோ அந்த அபிலாஷைகளுக்கு மதிப்புத் தரும் வகையில் தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தலைவர்களான தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் புதிய இலங்கையை சகலரும் உரிமை பெற்ற நிலையில் நிம்மதியும் திருப்தியும் உள்ள மக்களை இலங்கையில் உருவாக்க முன்வரவேண்டும். ஜனநாயக அடிப்படையில் இதுவே மிக நியாயமானதாகும்'.

திரு. ரி. பி. முருகையா உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 9 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389, Registered as Newspaper in Sri Lanka